முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1372

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.07.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. பிரம்ம சக்தியே அரங்காவாழ்க
   பிரணவக் குடில் படைத்த தேசிகா வாழ்க
   வரம் தரும் வள்ளலே வாழ்கவாழ்க
   வையகத்தைக் காக்கும் அண்ணலே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 17 ம் நாள், 02.07.2023, ஞாயிற்றுக்கிழமை)

   தாழ்பணிந்து உன் திருவடி பற்றி
   தரணியோர் தீட்சை ஏற்றுவிட்டால்
3. ஏற்றவர்க்கு விமோசனம் உண்டுஉண்டு
   இணைந்து உன் தர்மத்தை காத்துமே
   ஆற்றல்பட பொருளுதவி செய்துகொண்டு
   அவரவரால் இயன்ற உடல் உழைப்பு தந்து
4. தந்துமே அரங்கன் தொண்டர்களென
   தரணியில் வலம்வரும் அன்பர்களுக்கு
   செந்தூரரான் என் பரிபூரண ஆசி உண்டு
   சித்திகளும் அடைய மார்க்கமும் உண்டுஉண்டு
5. உண்டான உண்மை நெறி காட்டுகின்ற
   உயர்வான அரங்கன் சன்மார்க்க நெறி
   கண்டமிடர் போக்கி காப்பதோடு
   கலியுகத்தில் அவர்களுக்கும் ஞானியாகும்
6. ஆகுகின்ற வாய்ப்பு யோகம் தனை
   ஆற்றல்பட அருளிக் காத்தருளும்
   அருளவே அரங்கனோடு யானிருந்து
   அற்புதத்தை உலகுக்கு நடத்தி அருள

7. வரமாக வருபவர்க்கும் அரங்கனுக்கும்
வாரிவாரி வழங்கி ஆறுமுகன் யான்
யானுமே அற்புதம் நடத்திவர
வையகத்தில் உலகோர் அரங்கன் குடில் நோக்கி
8. வருகின்ற வரவை கூட்டி நிற்க
வையகத்தில் நன்மைபலன் மிகுதி கண்டு
கண்டுமே ஞானவான்கள் தலைமை கூடி
கலியிலும் ஞானிகள் நிரம்பி நிற்க
9. தொண்டுவழி மக்களுக்கு சேவையாற்றி
தூய வழிநடத்தும் ஞானத் தலைமை
தலைமைகூடி உலகமெங்கும் ஞானிகளின் தனிப்பெரும் ஞானஆட்சிக்காலம்
தலைவனாக என்னருளால் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–